

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (22–06– 2025) சென்னை, கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிட்யூட் வளாகத்தில் ரூ.487.66 கோடி மதிப்பீட்டில் புதியதாக குழந்தைகளுக்கு என்று பிரத்யேக உயர் பன்னோக்கு மருத்துவமனை இடம் தேர்வுறுத்தும்கட்டுமானப்பணிகள்குறித்து ஆய்வுமேற்கொண்டார்கள். இந்நிகழ்வில் துறைஅரசுமுதன்மைச்செயலாளர்முனைவர்.ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், , தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தர் மரு.நாராயணசாமி, பதிவாளர் மரு.சிவசங்கீதா, கிங் இன்ஸ்டிட்யூட் இயக்குநர் மரு.இந்துமதி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செயற்பொறியாளர் கார்த்திகேயன், மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் ஸ்ரீதரன், மோகன்குமார் மற்றும் மருத்துவ அலுவலர்கள், உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 4102 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கழக தோழர்கள், மகளிருக்கான நலத்திட்ட உதவிகள் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் அரசுப் பள்ளிகளில் பயின்று 12ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை என மொத்தம் 4102 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ., தலைமையில் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆர்.காந்தி ஆகியோர் வழங்கி சிறப்புரை யாற்றினர். நிகழ்வில், க.செல்வம், எம்.பி., மேயர் மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், ஒன்றியச் செயலாளர்கள் படுநெல்லி பி.எம்.பாபு, பி.எம்.குமார், பகுதிச் செயலாளர்கள் கே.திலகர், சு.வெங்கடேசன், எஸ்.சந்துரு, அ.தசரதன், தொகுதி பார்வையாளர் ஜெ.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் –பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

### எது ஆன்மிகம், எது அரசியல் என்பதை ஆண்டவர் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்!

# மதுரை மாநாடு முழுக்க, முழுக்க அரசியல் மாநாடு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!



சென்னை, ஜுன் 23-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (22.06.2025) சென்னை, அயனாவரம், காசி விஸ்வநாதர் திருக்கோயிலில் பொதுநல நிதி மற்றும் திருக்கோயில் நிதி மூலம் ரூ.97 இலட்சம் மதிப்பீட்டில் திருக்குளத்தை சீரமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான அயனாவரம், காசி விஸ்வநாதர் திருக்கோயிலின் சிலைகள் காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பதால் அதிக தெய்வீகத்தன்மையோடு பக்தர்களின் வேண்டுதல்கள் அனைத்தும் விரைவாக நிறைவேற்றுகின்ற திருக்கோயிலாக இப்பகுதிவாழ் மக்கள் இறை தரிசனம் செய்து வருகின்றனர். இத்திருக்கோயிலின் திருக்குளமானது காலம் சென்ற மூத்தோர்களுக்கு தர்ப்பணம் மற்றும் திதி தருவதற்கு பெருமளவில் பயன்பாட்டில் உள்ளது.

கடந்த காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த இக்குளம் தற்சமயம் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் 97 லட்ச ரூபாய் செலவில் சீரமைக்கப்பட உள்ளது. அதுமட்டுமல்லாமல் இரண்டு கழிப்பிட வசதிகளுடன் கூடிய 2 தர்ப்பண மண்டபங்கள் கலைநயத்தோடு அமைக்கப்படு கின்றன. இப்பணிக்காக ஆணையரின் பொது நல நிதியிலிருந்து ரூ.77 இலட்சமும், திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.20 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, ரூ.4 கோடி மதிப்பீட்டில் 3 புதிய திருக்குளங்கள் ஏற்படுத்தும் பணிகளும், ரூ.137 கோடி மதிப்பீட்டில் 249 திருக்குளங்கள் சீரமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் 70 சதவீத பணிகள் நிறைவு பெற்றுள்ளன. திருக்கோயில்கள் சார்பில் ரூ.350 கோடி மதிப்பீட்டில் 87 புதிய திருமண மண்டபங்கள், ரூ.131 கோடி மதிப்பீட்டில் 147 புதிய அன்னதானக் கூடங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், கடந்த 4 ஆண்டுகளில் 3,118 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இந்தாண்டு இறுதிக்குள் 3,500 திருக்கோயில்களின் குடமுழுக்கை எட்டுவோம்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான 7,598.13 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்து பாதுகாக்கும் பணிக்கு 38 மாவட்டங்களுக்கும் தனி வட்டாட்சியர்கள், நில அளவர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதுவரை 2,02,455 ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு எல்லை கற்கள் நட்டு அந்த நிலம் எந்த கோயிலுக்குச் சொந்தமானது என குறிப்பிட்டு அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. மாநில வல்லுநர் குழுவால் 12,533 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

திராவிட மாடல் ஆட்சியில் தங்களால் திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் நிதி முறையாக செலவிடப்படுகிறது என்பதனால்தான் உபயதாரர்கள் இதுவரை ரூ.1,365 கோடியினை திருப்பணிக்கு மனமுவந்து வழங்கியுள்ளனர். இது அரசின் மீதும், துறையின் மீதும் உபயதாரர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. எல்லாம் வல்ல இறைவன் துணையோடு மீண்டும் 2026-ஆம் ஆண்டு அமையவுள்ள இந்த ஆட்சியிலும் இப்பணிகள் தொடரும். அளவற்ற திருப்பணிகளால் சரித்திரத்தில் இடம்பெற்றுள்ள இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் போன்ற மாமன்னர்களின் வரிசையில் எங்கள் முதல்வரின் பெயரும் இடம்பெறும்.

மகாராஷ்டிர மாநில ஆளுநர் சி.பி.இராதாகிருஷ்ணன் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கின்ற போது பல சந்தர்ப்பங்களில் நியாயமாக பேசிக் கொண்டிருந்தார். எங்கள் முதல்வரை கூட மேடையிலேயே புகழ்ந்த வரலாறும் உண்டு. இன்று காலத்தின் கட்டாயத்தால் இப்படி எல்லாம் அவரை பேச வைக்கிறார்கள். எல்லோருக்கும் எல்லாம் என்பதே தமிழக முதல்வர் அவர்களின் கொள்கையாகும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன்னுடைய பராசக்தி படத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே கோயில்கள் கூடாது என்பதல்ல அது கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்றுதான் சொல்லி இருக்கின்றார்.

ஆகவே இந்த ஆட்சியானது ஆத்திகர்கள், நாத்திகர்கள் அனைவரும் மனிதர்கள் என்ற உணர்வோடு, அவர்கள் விரும்புகின்ற மத வழிபாட்டிற்கு தேவையான அனைத்து அடிப்படைகளையும் செய்து தருகின்ற ஒரு ஆட்சிதான் திராவிட மாடல் ஆட்சி என்பதை அந்த ஆளுநருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கக் கூடிய ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்கிறது. எந்த ஆட்சியிலும் அனைத்துலக முத்தமிழ் முருகன் பக்தர் மாநாடு நடத்தப்படவில்லை. வருகின்ற 7.7.2025 அன்று குடமுழுக்கு நடைபெறும் திருச்செந்தூர் திருக்கோயிலுக்கு ரூ.400 கோடி மதிப்பில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உள்பட 117 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. பெருந்திட்ட வரைவு பணிகளின் கீழ் பழனியில் 98 கோடி ரூபாய் செலவிலும், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.86 கோடி செலவிலும் பணிகள் நடைபெற்று வருவதோடு, சுவாமிமலையில் ரூ.5 கோடி செலவில் மின்தூக்கி அமைக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு 2,000 மூத்தக் குடிமக்கள் அறுபடை வீடுகளுக்கு கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லப்பட்டதை போல் இந்தாண்டும் 2,000 நபர்கள் அழைத்துச் செல்லப்பட உள்ளனர். அறுபடை வீடுகள் மற்றும் அறுபடை வீடுகள் அல்லாத 143 முருகன் திருக்கோயில்களுக்கு 1085 கோடி ரூபாய் 884 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்படி இந்த ஆட்சியில் தான் தமிழ்க் கடவுள் முருகனுக்கு பெருமைக்கு பெருமை சேர்த்து இருக்கின்றோம். ஆகவே முருக பெருமான் முழுவதுமாக எங்கள் முதல்வர் பக்கத்தில் இருக்கின்றார்.

எது ஆன்மிகம், எது அரசியல் என்பதை ஆண்டவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவர்கள் நடத்துகின்ற இன்றைய மாநாடு முழுக்க முழுக்க அரசியல் மாநாடு. நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பணிகள் அறம் சார்ந்த பணிகள், பக்தர்களுக்கு தேவையான பணிகள், ஆன்மிகப் பணிகள். ஆகவே இறைவன் இரண்டையும் பகுத்துப் பார்க்கின்ற ஆற்றல் பெற்றவர். நிச்சயமாக இது போன்ற போலியான நடவடிக்கைகளுக்கு இறைவன் என்னாலும் துணை இருக்க மாட்டார். முருக பக்தர்கள் மாத்திரமல்ல ஆன்மிகம் சார்ந்த இறை அன்பர்கள் அனைவருமே மகிழ்ச்சியோடு இருக்கின்ற ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்கிறது.

மேலும், முதல்வர் அவர்கள் எந்த ஆட்சியில் இல்லாத அளவிற்கு இந்த ஆட்சியில் இந்து சமய அறநிலையத்துறைக்கு ரூ.1,060 கோடியை அரசு நிதியாக வழங்கியிருக்கின்றார். இன்றைய முருகன் மாநாட்டிற்கு வாழ்த்து சொல்லியிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் அரசின் சார்பில் துறைக்கு மானியமாக எவ்வளவு கோடியை ஒதுக்கி தந்தார் என்பதை செய்தியாளர்கள் அவரிடம் கேள்வியாக கேளுங்கள். ஆகவே இந்த ஆட்சி இறையன்பர்களுக்கு ஒரு பொற்கால ஆட்சி என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பணிகளை அந்த மாவட்டத்தின் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களும், துறையினுடைய அமைச்சர் நானும், துறை செயலாளர், ஆணையர், தூத்துகுடி மாவட்ட ஆட்சியர் என அனைவரும் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகிறோம். கடந்த இரண்டு நாட்களுக்கு திருச்செந்தூரில் ஆய்வுக் கூட்டம் நடத்தி பணிகளை விரைவுபடுத்தியுள்ளோம். மீண்டும் வரும் 27-ஆம் தேதிக்குள் ஆய்வுக் கூட்டம் நடைபெறும். குடமுழுக்கிற்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஐ.முல்லை, உதவி ஆணையர் க.செல்வம், வாசு எம்.சி., பரம்பரை அறங்காவலர் டி.ஆர்.சுப்பராய் தவே மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் தொகுதி மேம்பாட்டு நிதியில்

# டென்னிஸ் மைதானம் - உள்விளையாட்டு அரங்கம் - கபடி போட்டி!

## அமைச்சர்கள் ஆர்.காந்தி – அன்பில் மகேஷ்பொய்யாமொழி தொடங்கி வைத்தனர்!

சென்னை, ஜுன் 23-

காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கில், (20.06.2025) அன்று காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்டுள்ள டென்னிஸ் மைதானம் மற்றும் மேல்ஒட்டிவாக்கம் ஊராட்சியில், கூத்திரமேடு கிராமத்தில் கட்டப்பட்டுள்ள கபடி உள்விளையாட்டு அரங்கத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் திறந்து வைத்து, பார்வையிட்டார்கள்.

காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கமானது 14.5 ஏக்கர் பரப்பளவில் அமையபெற்றுள்ளது. அதில் 400மீ தடகள ஓடுபாதை, கூடைப்பந்து ஆடுகளம், இறகுப்பந்து ஆடுகளம், வாலிபால் ஆடுகளம், கைப்பந்து ஆடுகளம், கால்பந்து ஆடுகளம், கபடி ஆடுகளம், பூப்பந்து மைதானம், நீச்சல்குளம், ஹாக்கி விளையாட்டு மைதானம், 2 டென்னிஸ் மைதானம் கொண்டுள்ளது. சுமார் 200றக்கும் மேற்பட்ட வீரர்/ வீராங்கனைகள் தினமும் விளையாட்டு அரங்கில் பயிற்சி பெற்றும், விளையாடியும் வருகின்றனர். இந்த விளையாட்டு அரங்கிற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் அமைச்சர்கள் ஆர். காந்தி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் 20242025ஆம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.29 இலட்சம் மதிப்பீட்டில் 7688 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள டென்னிஸ் மைதானத்தினை திறந்து வைத்து, பார்வையிட்டார்கள்.

அதனை தொடர்ந்து அரசு மாதிரிப்பள்ளியில் பயின்று JEE நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று சென்னை ஐஐடியில் பயில இடம் கிடைத்த மாணவன் எம். மணி சர்மாவை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி பாராட்டி, வாழ்த்துகளை தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வினை தொடர்ந்து காஞ்சிபுரம் ஒன்றியம், மேல்ஒட்டிவாக்கம் ஊராட்சி, கூத்திரமேடு கிராமத்தில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் 2018-2019 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.53.50 இலட்சம் மதிப்பீட்டில் 17x20.90 மீட்டர் அளவு கொண்டு 40 நபர்கள் அமரக்கூடிய இருக்கை வசதிகளுடன் (Seating Gallery), 13x8 மீட்டர் அளவு கொண்ட விளையாட்டு தளமும், உடை மாற்றும் அறை மற்றும் சேமிப்பு அறையுடன் கட்டப்பட்டுள்ள கபடி உள்விளையாட்டு அரங்கத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் திறந்து வைத்து, நாணயத்தை சுண்டி (TOSS) கபடி விளையாட்டினை துவக்கி வைத்து, விளையாட்டினை பார்வையிட்டார்கள்.

பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் பயிற்சி மேற்கொள்ளும் விளையாட்டு வீரர் ஏ.விஷால் “நிறைந்தது மனம்” திட்டத்தின்கீழ் தெரிவித்ததாவது:

நான் காஞ்சிபுரம் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் டென்னிஸ் மைதானத்தில் பயிற்சி பெற்று வருகிறேன். அண்ணா விளையாட்டு அரங்கத்தில் இருந்த டென்னிஸ் மைதானம் 2 ல் ஒன்று சேதமடைந்து, ஒன்று மட்டுமே உபயோகத்தில் இருந்த நிலையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் டென்னிஸ் பயிற்சி மேற்கொண்டு தேசிய அளவில் போட்டிகளில் பங்கு பெற உதவியாக உள்ளது. புதிய டென்னிஸ் மைதானம் பயிற்சி மேற்கொண்டு வரும் வீரர்/வீராங்கனைகளுக்கு சரியான தருணத்தில் அமைத்து தந்துள்ளதால், எங்களால் பயிற்சியினை செய்ய உதவியாக இருக்கும். எனவே வீரர்/ வீராங்கனைகளுக்கும், விளையாட்டு துறைக்கும் பல்வேறு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வீரர்/ வீராங்கனைகள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், சார் ஆட்சியர் திரு.ஆஷிக் அலி, காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி.மலர்க்கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத்தலைவர் திருமதி.நித்தியா சுகுமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ச.சோமசுந்தர், மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி. கோ.சாந்தி, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், வீரர்/வீராங்கனைகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சி தெற்கு - லத்தூர் வடக்கு

# ஒன்றியக் கழகச் செயலாளர் கே.எஸ்.இராமச்சந்திரன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!

மதுராந்தகம், ஜுன் 23

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் இலத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளரும் லத்தூர் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவருமான கே.எஸ்.ராமச்சந்திரன் சில மாதங்கள் உடல்நிலை சரியில்லாததால் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று (22.6.2025 ஞாயிற்றுக்கிழமை) இரவு சுமார் 7.30 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை தெரிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்ததும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் லத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ். ராமச்சந்திரன் மறைவுக்கு கழக முன்னணியினர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது உடல் லத்தூர் வடக்கு ஒன்றியம் சோழக்காடில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (23.6.2025) மாலை 4 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இடுகாட்டில் தகனம் செய்யப்பட உள்ளது.

### காஞ்சி தெற்கு மாவட்டம் – லத்தூர் வடக்கு

# ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.இராமச்சந்திரன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜுன் 23-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் - லத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே. எஸ்.இராமச்சந்திரன் (வயது 59) நேற்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த கே.எஸ். இராமச்சந்திரன் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.



மறைந்த கே.எஸ்.இராமச்சந்திரன் 2002 முதல் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் 2006-ல் ஒன்றியக் குழு பெருந்தலைவராகவும், 2021 முதல் ஒன்றியக் குழு உறுப்பினராகவும், ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

அவரது மனைவி சாந்தி இராமச்சந்திரன் தற்போது லத்தூர் ஒன்றிய பெருந்தலைவராக உள்ளார்.



மாமல்லபுரம் நகர தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நகரக் கழகச் செயலாளர் வெ.விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகரம் முழுவதிலும் 4000 கழக உறுப்பினர்களை சேர்ப்பது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உறுப்பினர் படிவங்கள் நிர்வாகிகளிடம் வழங்கப்பட்டன. இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### மொழிப்போர்த் தியாகி

# வாசுதேவநல்லூர் இல.குட்டியப்பன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஜுன் 23–

தென்காசி வடக்கு மாவட்டம், மொழிப்போர்த் தியாகி வாசுதேவ நல்லூர் இல. குட்டியப்பன் மறைவு எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைவு செய்தி அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

கழகத் தீவிர பற்றாளரும் மொழிப்போர் தியாகியுமான வாசுதேவநல்லூர் இல.குட்டியப்பன் அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன்.

கடந்த 40 ஆண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழு நேர ஊழியராக பணி புரிந்து பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைச் சென்று திருமணம் கூட முடிக்காமல் முழு நேர கழகப் பணியாளராக பணியாற்றிய அன்னாரது தியாகத்தை போற்றிடுவோம்.

அன்னாரை இழந்து வாடும் மாவட்டக்கழகநிர்வாகிகளுக்கும் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



பல்லாவரம் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதியில் வட்டங்கள் தோறும் வாக்குச்சாவடி வாரியாக பாக முகவர்கள் செயல் வீரர்கள் கூட்டங்களில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம். எல்.ஏ. அந்தந்த பாகங்களில் கட்சி சம்பந்தமான மற்றும் பொதுவான குறைகளை கேட்டறிந்து, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தனர். மேலும் ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர்கள் சேர்க்கும் படிவங்களை அந்தந்த பாக முகவர்களிடம் வழங்கி பாகங்கள் வாரியாக ஒவ்வொரு பாகமாக 30 சதவீத வாக்காளர்களை உறுப்பினர்களாக சேர்க்குமாறு கேட்டுக் கொண்டார். உடன் பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவருமான இ. ஜோசப் அண்ணாதுரை ஒவ்வொரு கூட்டங்களையும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். உடன் மூ.ரஞ்சன், பகுதி நிர்வாகிகள் வ.முத்து, ச.சிவக்குமார், வட்டக் கழக செயலாளர் டி.வி.ராஜா எம்.சி. வட்டக் கழக நிர்வாகிகள் தேர்தல் பணிக்கு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.